JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

Volume: 15 | Issue: 11 | January 2025 | Mohan C. Lazarus | Annual Subscription: ₹ 100 | Single Copy: ₹ 10



எனக்காக நீ வைராக்கியமாக பிரயாசப்படுகிறதினால் நான் உன்னை

## தேடி வந்து ஆசீர்வதிப்பேன்!

# உள்ளே...

வாலிபர் உலகம்

06

12

24

30


இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனியெங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன், **9750955547** என்ற எண்ணிற்கு SMS அல்லது Whatsapp மூலமாக தெரியப்படுத்துங்கள்.




அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். youth.jesusredeems.com என்ற website மூலமாகவும் ஆன்லைனில் சந்தா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்.

JESUS REDEEMS MINISTRIES

**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211.
**Phone: 04639-353333 | Cell:9750955547**
E-mail: youth@jesusredeems.org
www.jesusredeems.com | youth.jesusredeems.com




**எனக்கு பிரியமான வாலிப உள்ளங்களுக்கு,**
**இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்களுக்கு என் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!**

வாலிபர்களாகிய உங்களை இயேசு கிறிஸ்து மிகவும் அதிகமாக நேசிக்கிறார். இந்த எழுப்புதலின் நாட்களில் உங்களை பயன்படுத்துவேன் என்று தேவன் வாக்குக் கொடுத்திருக்கிறார். அதன்படியே கர்த்தர் ஒரு வைராக்கியமான சேனையை எழுப்பிக்கொண்டும் இருக்கிறார். 2024ஆம் ஆண்டு இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தோடு இணைந்து, சுவிசேஷம் அறிவிக்கவும், இலட்சக்கணக்கான மணி நேரங்கள் ஜெபிக்கவும் தேவன் உங்களை பயன்படுத்தியதை நினைத்துப் பார்க்கும்போது என் இதயம் மிகவும் சந்தோஷப்பட்டு களிகூருகிறது. இயேசு கிறிஸ்துவும் சந்தோஷப்பட்டு களிகூருவார். தொடர்ந்து இந்த வருடத்திலும் இன்னும் அதிக தீவிரத்தோடு ஓட உங்களை வாழ்த்துகிறோம்.

**வாலிபர் உலகம் பத்திரிக்கையின் அனைத்து வாசகர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், மொழிபெயர்ப்பாளர்களுக்கும், Ignitersகளுக்கும், ஜெபக்குழுவில் இணைந்து ஜெபிக்கிற யாவருக்கும் எங்களது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!**

# தலைவாசல்

*எனக்குப் பிரியமான வாலிபர்களுக்கு, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்!*




தேவனுடைய கிருபையால் 2024 ஆம் ஆண்டு தேவன் வாக்கு கொடுத்தபடி எல்லா தீங்குக்கும் உங்களை விலக்கிக் காத்து, தன்னுடைய ராஜ்யப் பணியைச் செய்ய உங்களை உற்சாகப்படுத்தி பயன்படுத்தினபடியால் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்.

இந்த ஆண்டும் தேவன் உங்களை விசேஷவிதமாக ஆசீர்வதித்துப் பயன்படுத்தப் போகிறார். **நான் உங்களிடத்தில் வந்து உங்களை ஆசீர்வதிப்பேன்** (யாத். 20:24) என்பதாக அவர் உங்களுக்கு வாக்கு கொடுக்கிறார். ஏன் உங்களை ஆசீர்வதிக்கிறார்! நீங்கள் அவருடைய நாமத்தை ஓய்வின்றி, பயமின்றி எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் பிரஸ்தாபப்படுத்துகிறபடியால், அவர் உங்களிடத்தில் வந்து, உங்களை ஆசீர்வதிப்பார்.

இந்த ஆண்டின் ஆரம்பத்திலேயே உங்களுடைய ஓட்டம் வேகமாக இருக்க வேண்டும். நீங்கள் தான் எழுப்புதலை தீவிரமாகப் பரவச் செய்ய வேண்டும். தேவனுடைய நாமம் எல்லா மூலை முடுக்குகளிலும் தீவிரமாய் பிரஸ்தாபப்படுத்தப்பட வேண்டும். இதுவரை எழுப்புதல் அக்கினியை தேசமெங்கும் பரவச் செய்கிற **Igniters** ஆகிய நீங்கள், இனி தேவனுடைய நாமத்தைத் தீவிரமாகப் பிரஸ்தாபப்படுத்த வேண்டும். எங்கெல்லாம் அவருடைய நாமத்தை நீங்கள் பிரஸ்தாபப்படுத்துகிறீர்களோ, அதாவது சுவிசேஷமாகிய இயேசுவின் அன்பை அறிவித்து, மேலும் சுவிசேஷப் பிரதிகளைக் கொடுத்து, மேலும் உங்கள் ஜெபத்தை தீவிரப்படுத்தி, ஜெபக்குழுகளாய் ஜெபிக்கின்றீர்களோ, அந்த இடத்தில் தேவன் வந்து, அவர்கள் வேதனையை மாற்றுவார், கண்ணீரைத் துடைப்பார், ஜனங்களுக்கு அற்புதம் செய்வார்.



**இனி நீங்கள் சுவிசேஷம் அறிவிக்கும் இடத்தில் அவருடைய நாமம் உயர்த்தப்படுவதால், அற்புதங்களும் அடையாளங்களும் தீவிரமாய் நடக்கும். தேவன் வாக்கு கொடுத்தபடி ஆதி அப்போஸ்தலர் காலம் திரும்ப ஆரம்பித்துவிட்டது. தேவன் அப்போஸ்தலர்களை வல்லமைப்படுத்தி பயன்படுத்தியது போல, உங்களையும் பயன்படுத்துவார்.**

***இனி உங்கள் ஜெபத்தை தீவிரப்படுத்த வேண்டும்!***

***இனி வைராக்கியமாய் சுவிசேஷம் அறிவிக்க வேண்டும்!***

***என் தேசத்தில் எழுப்புதலை காணும் வரை ஓயமாட்டேன் என்று, இயேசுவின் சீஷனாய் செயல்பட வேண்டும்!!***

கிறிஸ்துவின் பணியில்
**மோகன் சி. லாசரஸ்**





JESUS REDEEMS MINISTRIES

இயேசு விடுவிக்கிறார் ஊழிய

# தரிசனம்

JESUS REDEEMS MINISTRIES

50 கோடி சுவிசேஷம்
5 கோடி ஆதாயம்

VISION 2030

| தரிசனம் | செயல்பாடு |
|---|---|
| 50 கோடி பேருக்கு சுவிசேஷம் | 5 கோடி ஆத்தும ஆதாயம் |

## வாலிபர் ஊழிய தரிசனம்

| தரிசனம் | செயல்பாடு |
|---|---|
| 10 கோடி பேருக்கு சுவிசேஷம் | 1 கோடி வாலிபர்கள் ஆத்தும ஆதாயம் |

## 10 கோடி ஆத்தும ஆதாயம்

10 கோடி வாலிபர்களுக்கு சுவிசேஷம் அறிவித்து ஒரு கோடி வாலிபர்களை ஆதாயப்படுத்த தேவன் கொடுத்த தரிசனத்தின்படி, கடந்த 2024ஆம் ஆண்டு **35,03,655** வாலிபர்களுக்கு சுவிசேஷம் அறிவித்ததில், **30,000** வாலிபர்கள் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளனர். ஒரு கோடி ஆத்துமாக்களுக்கு ஒரு கோடி மணி நேரம் ஜெபிக்க வேண்டும் என்று தீர்மானித்ததின் அடிப்படையில் தினமும் ½ மணி நேரம் ஜெபிக்க ஜெப அட்டை, ஜெபக்குழு, Igniters Fellowship எனப் பலவிதமான கூடுகைகளில் ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டன. அதன் விளைவாக **7,13,152** மணி நேரம் ஜெபித்து முடிக்கத் தேவன் கிருபை செய்தார். 2024 ஆம் ஆண்டு ஊழியத்தை சிறப்பாகச் செய்து முடிக்க உதவிய தேவனுக்கே மகிமை உண்டாவதாக!









சாட்சி தொகுப்பு: ஜாய்லின்

# காத்திருப்பின் அவசியம்!!!



**கிறிஸ்தவ குடும்பத்தில் சபை போதகரின் மகனாகப் பிறந்து சிறுவயதிலிருந்தே தேவபக்தியில் வளர்க்கப்பட்ட போதிலும், இளம் வாலிப வயதில் கிரிக்கெட்டிற்கு அடிமைப்பட்டபோது, தேவனால் பிரித்தெடுக்கப்பட்டு அநேகப் பாடல்களைத் தேவனிடமிருந்து பெற்றுக்கொண்டு, இன்றைக்கு பாடல் ஆராதனை மூலமாகக் கர்த்தருடைய நாமத்தை உயர்த்தி வரும் போதகர் பென்னட் கிறிஸ்டோபர் அவர்களுடன் ஓர் நேர்காணல்.**

**உங்களைப் பற்றியும் உங்கள் சிறுபிராயம் பற்றியும் சொல்லுங்களேன்?**

நான் கோயம்புத்தூர் மாவட்டத்தில் கிறிஸ்தவ குடும்பத்தில் ஒரு சபை போதகருக்கு மகனாகப் பிறந்தேன். எங்கள் குடும்பத்தில், அப்பா, அம்மா நான் மற்றும் தம்பி. நான் $1\frac{1}{2}$ வயது குழந்தையாக இருந்தபோது, ஒரு முறை பால் குடிக்கும்போது நாசியில் பால் ஏறி மூக்கிலும் வாயிலும் வெளியே வந்து என்னுடைய மூச்சு நின்று போனது. ஐந்து நிமிடம் முற்றிலும் மூச்சு இல்லாமல் இருந்தேன். அந்த ஐந்து நிமிடத்தில் எனது அம்மா ''எனது மகனுக்கு ஜீவனை கொடுத்தால் அவனை ஊழியத்திற்கு ஒப்புக்கொடுக்கிறேன்'' என்று ஜெபித்தபோது கர்த்தர் கிருபையாய் எனக்கு ஜீவனைக் கொடுத்தார். அப்பொழுதிலிருந்து நான் ஊழியத்திற்கென்று அர்ப்பணித்து வளர்க்கப்பட்டேன். நான் சிறுவயதிலிருந்தே சர்ச் campusல் தான் வளர்ந்தேன். அந்த campusல் ஒரு orphanage இருக்கும், அதில் 35 பையன்கள் இருந்தார்கள். அவர்களோடு இணைந்து தான் நான் விளையாடுவேன். இப்படி எனது குழந்தை பருவம் சபையிலும் என் நண்பர்களோடும் மிகவும் சந்தோஷமாக இருந்தது.



நான் போதகரின் மகனாக இருந்ததால் தேவ பக்தியில் அதிகமாக வளர்க்கப்பட்டேன்.

**ஊழியத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நீங்கள் சிறுவயதில் எப்படி படித்தீர்கள்?**

சிறுவயதிலிருந்தே நான் நன்றாகப் படிப்பேன். வகுப்பில் முதல் மாணவனாக இருப்பேன். என் பெற்றோர் என்னை ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்திருந்தபடியால் நான் நன்றாகப் படித்து வேலைக்கு ஏதேனும் சென்று விடுவேன் என்று பயந்து என்னை ஒருபோதும் பாராட்டமாட்டார்கள். 100 மதிப்பெண்கள் எடுத்தாலும் எந்தப் பாராட்டும் கிடைக்காது. இதனால் எனக்கு progress reportஐ பெற்றோரிடம் காட்டுவதற்கே விருப்பம் இருக்காது. Appreciation இல்லாதது எனக்கு மிகவும் வேதனையாக இருக்கும். ஆனாலும் ஆண்டவருடைய கிருபையால் தொடர்ந்து நன்றாகப் படித்துக்கொண்டிருந்தேன். கர்த்தர் என்னுடைய படிப்பையும் ஆசீர்வதித்தார்.

**நீங்கள் bright studentஆக இருந்தும் பெற்றோரிடம் பாராட்டு கிடைக்காததால் என்ன செய்தீர்கள்?**

அந்தச் சமயத்தில் எனது கவனம் கிரிக்கெட் விளையாட்டின் மீது திரும்பியது. நான் நன்றாகக் கிரிக்கெட் விளையாடுகிறேன் என்று அறிந்து கொண்டேன். அந்த விளையாட்டின் மீதிருந்த அலாதி ஆர்வத்தினால் ஒரு பைத்தியம் போல் நடந்து கொள்வேன். Batஉடன் தான் தூங்குவேன். கடைகளுக்கும் batஉடன் தான் செல்வேன். சச்சின் டெண்டுல்கர் மீது பைத்தியம். அவரை யாராவது ஏதாவது தவறாகப் பேசினால் அடிக்கிற அளவுக்குப் போய் விடுவேன். அந்த மாதிரி ஒரு வெறி. நான் அப்படி இருந்தபோது என் பெற்றோர் என்னைக் குறித்து 'இவன் ஊழியத்தை விட்டு விலகி விடுவான்' என்று மிகவும் பயந்தார்கள். எனக்கு 15 வயதாக இருக்கும் போது நான் நன்றாகக் கிரிக்கெட் விளையாடுவதைப் பார்த்த அனைவரும் என்னைக் கிரிக்கெட்டில் சேர்த்து விடுமாறு என் பெற்றோரிடம் கூறினர். இதைக் கேட்ட என் அப்பா என்னைப் பயங்கரமாக அடித்தார்கள். அப்போது கட்டிலில் இடித்துப் புருவத்தில் ஒரு வெட்டு ஏற்பட்டு, அந்தத் தழும்பு இப்போதும் இருக்கிறது. ''இந்த உலகத்தில் நான் வேறு எதையுமே உன்னிடத்தில் கேட்கவில்லை நீ ஊழியம் செய்ய வேண்டும்'' என்பதுதான் எனது விருப்பம் என்று என் அப்பா என்னிடம் அடிக்கடி சொல்வார்கள். அது என் வாழ்க்கைக்கான தேவனுடைய சித்தமாயிருந்ததினால் எனது பெற்றோர் அதில் மிகவும் கவனமாயிருந்தனர்.

**கிரிக்கெட் தான் வாழ்க்கை என்றிருந்த உங்களுக்கு எப்போது ஊழியத்தின் மீது ஒரு தாகம் உண்டானது?**

நான் பத்தாம் வகுப்பு படிக்கும்போது தான் எனக்கு ஊழியத்தைக் குறித்தும், சபையைக் குறித்தும் ஒரு பாரம் உண்டானது. மனிதர்களுக்காக ஊழியம் செய்யும் அனைவரையும் பார்த்து ஒரு விரக்தி வந்தது. ''கர்த்தருக்காக நிற்பதற்கு என்று ஒரு ஆள் வேண்டுமே; கர்த்தர் பட்சத்தில் யார் நிற்பார்? எதை இழந்தாலும் வாய்ப்புகளை இழந்தாலும் கர்த்தர் பக்கம் நிற்பதற்கு ஆள் வேண்டுமே; அது ஏன் நானாக இருக்கக் கூடாது?'' என்ற வைராக்கியத்தை ஆண்டவர் எனக்குள் பெருகப் பண்ணிக் கொண்டே இருந்தார். அந்தக் காலகட்டம் தான் என் ஆவிக்குரிய மற்றும் ஊழிய வாழ்க்கைக்கு அடித்தளமாக அமைந்தது.

**ஓகே pastor! ஊழியத்தைக் குறித்த பாரம் உண்டான பிறகு, எப்பொழுது நீங்கள் முதல் முறையாகப் பாடல் எழுத ஆரம்பித்தீர்கள்? பாடல் எழுதுகிற கிருபை எப்படி உண்டானது?**



எனக்கு ஒரு 15 வயது இருக்கும்போது எங்கள் சபைக்கு ஒரு போதகர் வந்து ''உமக்கு விரோதமாகவும் உமது பரத்திற்கு விரோதமாகவும் நான் பாவம் செய்தேன்'' என்ற வசனத்தின் அடிப்படையில் பிரசங்கம்



செய்தார். நான் சபையை முடித்து வீட்டிற்கு செல்லும் வழியில் ஒரு தேவ பிரசன்னம் என்னை ஆட்கொண்டதை நான் உணர்ந்தேன். அந்த வசனம் ராகத்தோடு பாடலாக வந்தது. அப்பொழுது நான் வீட்டிற்கு சென்று அமர்ந்து ஆண்டவர் என் மனதில் போட்ட வரிகளை ஒரு நோட்டில் எழுதினேன். ராகம் மறக்காமல் இருக்க ஒரு 100 முறை அதனைப் பாடி இருப்பேன். அதுதான் கர்த்தர் எனக்குக் கொடுத்த முதல் பாடல். 15 வயதிலிருந்து ஆண்டவர் எனக்கு அநேக பாடல்களைத் தந்து வந்தார். எனக்கு 18 வயது வரும்போது கிருபையாக ஆண்டவர் எனக்கு 20க்கும் அதிகமான பாடல்களைத் தந்திருந்தார். அதனால் தான் ''நான் பாடல்களை எழுதுவது கிடையாது நான் பெற்றுக் கொள்கிறேன்'' என்று நான் சொல்லுவேன். தேவ பிரசன்னதில் இருக்கும்போது யாரோ என்னுடைய மனதில் வார்த்தைகளையும் ராகத்தையும் போடுவது போல் இருக்கும். நான் சொந்தமாகப் பாடல் எழுதுவதில்லை. நான் கர்த்தரிடத்திலிருந்து மட்டுமே பெற்றுக் கொள்கிறேன். பலமுறை நானாகப் பல பாடல்களை எழுத முயற்சித்து இருக்கிறேன். ஆனால் நான் எவ்வளவு முயற்சித்தாலும் என்னால் சொந்தமாக எழுத முடியாது. அப்படி இருக்கும்போது நான் பாடல்கள் எழுதுகிறேன் என்று எப்படி நான் கூறிக் கொள்ள முடியும்?

**சரி பாஸ்டர், சமீபத்தில் வெளிவந்த “உங்க நாமம் உயரணும்” என்ற பாடலும் “அவர் நாமம் இயேசு கிறிஸ்து” என்ற பாடல் இரண்டுமே ஆண்டவருடைய நாமத்தை உயர்த்துவதாக அமைந்திருக்கிறது. இந்தப் பாடல்களின் பின்னணி பற்றிக் கூற முடியுமா?**

‘உங்க நாமம் உயரணும்’ என்ற பாடல் நேரடியாக அதே வரிகள் எனக்கு வரவில்லை. அந்தப் பாடலில் உள்ள அல்லேலூயா chorusன் ராகம் தான் எனக்கு முதலில் கிடைத்தது. அதுவும் ‘ஆவியானவரே ஆவியானவரே’ என்ற வார்த்தை தான் எனக்குக் கிடைத்தது. அந்த chorusஐ மாத்திரம் அனேக அபிஷேகக் கூடுகைகளில் பாடும்பொழுது பலர் புதிதாகப் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டார்கள். இந்த வார்த்தைகளை மாத்திரமே திரும்பத் திரும்பப் பாடிக் கொண்டேஇருப்பேன். இப்படி யொரு நாள் ஜெப நேரத்தில் இந்த ‘ஆவியானவரே ஆவியானவரே’ என்ற chorusஐ நான்பாடிக் கொண்டே இருக்கும் போது அந்த வார்த்தைகள் ''அல்லேலூயா அல்லேலூயா'' என்று மாறியது பின்னர் ''உங்க நாமம் உயரமும்'' என்ற புதிய வார்த்தைகளை ராகத்தோடு தேவன் கொடுத்தார். அது அன்றே முழுப் பாடலானது.

நான் எங்கு இருந்தாலும், வாகனத்தில் செல்லும்போதும் வரும்போதும் எப்பொழுதுமே ஆண்டவரை துதித்து ஆராதித்துக் கொண்டே இருக்கிற ஒரு பழக்கம் எனக்கு உண்டு. அப்படி ஆராதித்துக் கொண்டிருக்கும்போது திடீரென்று ஒரு புது பாடல் ஆண்டவர் எனக்குத் தரப்போகிறார் என்றால் ஒரு வித்தியாசமான தேவ பிரசன்னம் என்னை ஆளுகை செய்யும். அவ்வாறு ஒருநாள் நான் தேவனுடைய நாமத்தைக் குறித்து சிந்தித்து துதித்துக்கொண்டிருந்தபோது ''அவர் நாமம் இயேசு கிறிஸ்து'' என்ற இந்தப் பாடலைத் தேவன் கொடுத்தார். இந்தப் பாடல் என்ன கற்றுக்கொடுக்கிறது என்றால், ஒவ்வொரு வியாதிக்கும் ஒவ்வொரு மருந்துண்டு. ஒவ்வொரு பிரச்சனைக்கும் பல தெய்வங்களைத் தேடிப் போகின்ற இந்த உலகத்தில் எல்லா பிரச்சனைக்கும் நம்முடைய எல்லா தேவைக்கும் போதுமானதும் நித்தியம் வரை நம்மைக் கொண்டு சேர்க்க வல்லமையுள்ள ஒரே ஒரு நாமம், இயேசு என்கிற நாமம்.

**உங்களது திருமண வாழ்க்கைப் பற்றிச் சொல்லுங்களேன் ?**



எனக்கு 2016ம் ஆண்டுச் சகோதரி. **Percia Mothi**யுடன் திருமணம் நடந்தது. எங்கள் திருமணமே தேவன் ஜீவிக்கிறார் என்பதற்கும், அற்புதமாய் தேவைகளைச் சந்திப்பார் என்பதற்கும் சாட்சியாக இருந்தது. எனது மனைவி ஒரு **IT** நிறுவனத்தில் **HR**ஆகப் பணிபுரிகிறார். எங்களுக்கு 2 மகள்கள் உள்ளனர்.









**வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

வாலிப காலத்தில் எல்லாருக்கும் 'நாம் முன்னேற வேண்டும், famous ஆக வேண்டும் என்கிற ஆசை இருக்கும். இது நியாயமான ஒரு விஷயம் தான். அதுவும் தாலந்துகள் இருக்கும்போது அது நம்மை மிகவும் அவசரப்படுத்தும். என்னிடம் திறமை, தாலந்து, பணம் இருக்கிறது என்று கர்த்தருடைய ஆலோசனை கேட்காமல் நானும் 9 ஆண்டுகளுக்கு முன்பதாக ஒரு CD வெளியிட்டேன். ஜெபம் பண்ணி தான் இதைச் செய்தேன். ஆனால் இது தேவ சித்தமா அல்லது தேவனுடைய நேரமா என்று தேவனிடம் கேட்காமல் செய்தேன். இதன் விளைவாக மூன்று லட்சம் ரூபாய் எனக்கு நஷ்டம் ஏற்பட்டது. இதற்குப் பிறகு ஆண்டவர் எப்பொழுது பாடல் வெளியிடச் சொல்லுகிறாரோ அப்பொழுது மட்டும் செய்யலாம் என்று விட்டுவிட்டேன். அநேக நாட்கள் காத்திருந்தேன். 2022ம் ஆண்டின் இறுதியில் பாடல் வெளியிட உத்தரவு கொடுத்து ஒவ்வொரு பாடலாக வெளியிடத் தேவனே உதவி செய்தார். அப்பொழுது தான் தேவனுடைய சித்தத்திற்கும் நேரத்திற்கும் காத்திருப்பதில் ஒரு மிகப்பெரிய பெலனும் பிரதிபலனும் இருக்கிறது என்று நான் கற்றுக் கொண்டேன்.

வாலிப பிள்ளைகளுக்கு ஒரு அண்ணனாக என்னுடைய வாழ்க்கை அனுபவத்தை வைத்து நான் கூற விரும்புவது என்னவென்றால், எத்தனை தாலந்துகள் இருந்தாலும், எத்தனை பணம் இருந்தாலும், எத்தனை வாய்ப்புகள் இருந்தாலும் உங்களுடைய அழைப்பை நிறைவேற்றக் கர்த்தருடைய நேரத்திற்காகக் காத்திருப்பது மிக மிக அவசியம். என்னுடைய வாழ்க்கையில் ஒரு வேளை என்னை ஆண்டவர் அழைப்பதற்கு முன்பதாக நானாகவே ஊழியத்திற்கு வந்திருப்பேனானால், அனேக தவறான பிரசங்கங்களை செய்திருக்க கூடும். தவறான, ஆழமான சத்தியமில்லாத பாடல்களை நான் வெளியிட்டிருக்கக்கூடும். நான் bible college முடித்து 14 வருடங்கள் ஆண்டவர் என்னை உருவாக்கினார். அதை நினைத்து இப்பொழுது நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். இந்த 14 ஆண்டுகளும் வீணாகப்போகவில்லை.

எனக்குத் திருமணம் ஆன பிறகும் கூட எனக்குச் சரியான ஊழியம் கிடையாது. குடும்பத்திற்கு மாதா மாதம் கொடுக்க என்னிடம் பணம் இருக்காது. என் மனைவி யிடமிருந்து காசு வாங்கி தான் செலவு செய்வேன். என்னுடைய இந்தச் சூழ்நிலையைப் பார்த்து என்னை ஏளனமாகப்பேசிஅநேகர்என்னைக்காயப்படுத்தினார்கள். ஆனால் வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆரோனின் கோல் துளிர்த்த சம்பவம் என்னை மிகவும் பலப்படுத்தியது. தேவ சமுகத்தில் வைக்கப்பட்டிருந்த 12 கோல்களில் கர்த்தர் தெரிந்துகொண்ட கோல், ஒரே இராத்திரியில் துளிர்த்து பூத்துக்காய்த்து வாதுமைப் பழங்களைத் தந்தது. அந்தக் கம்பை வெயில் பட நிலத்தில் நட்டு வைத்து, தண்ணீர் ஊற்றி, அது கனி கொடுக்கப் பத்து வருடங்கலாவது பொறுத்திருக்க வேண்டும் என்று மனிதன் சொல்வான். ஆனால் தேவ சமுகத்தில் இவையெல்லாம் நடக்க ஒரு ராத்திரி போதும். இந்த வெளிப்பாடு எனக்கு மிகப்பெரிய பெலனாயிருந்தது. அநேக மனமடிவாக்குகிற வார்த்தைகளை நான் கேட்கும்போது இந்தச் சம்பவத்தை நினைத்துக் கர்த்தருக்குள் என்னைத் திடப்படுத்திக்கொள்வேன்.

**முடிவாக வாலிபர்களுக்கு நான் சொல்லிக்கொள்வது என்னவென்றால். கர்த்தருடைய நேரத்திற்காகக் பொறுத்திருங்கள், அவருடைய வழிநடத்துதலுக்காகக் காத்திருங்கள். நம் தேவன் சகலத்தையும் அதினதின் காலத்தில் நேர்த்தியாய் செய்பவர். நமக்கு என்னதான் தாலந்துகள் இருந்தாலும் கர்த்தரால் நாம் உருவாக்கப்படுகிற நேரம் தான் மிகவும் அவசியமான நேரம். இந்தச் சமயத்தை ஆண்டவரும் எதிர்பார்க்கிறார். இன்னொரு முக்கியமான காரியத்தையும் நான் சொல்ல விரும்புகிறேன். கர்த்தருடைய ஊழியத்திற்கென்று நீங்கள் வந்துவிட்டால் எந்த மனிதனையும் நீங்கள் நம்ப வேண்டிய அவசியமே இல்லை. எந்த மனிதனும் உங்களை உயர்த்தவேண்டுமென்ற அவசியம் அவர்களுக்கும் இல்லை. அழைத்தவர் கர்த்தராயிருந்தால் அவரே உங்களை நடத்துவார்.**

கர்த்தரைப் பற்றிக்கொள்ளுங்கள்!
கர்த்தருக்காகக் காத்திருங்கள் !!
கர்த்தருடைய நேரத்தில் செயல்படுங்கள்!!!

# வாலிபர் எழுப்புதல் கூடுகை
































இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்திற்கு தேவன் கொடுத்த, "10 கோடி வாலிபர்களுக்கு சுவிசேஷம் அறிவித்து ஒரு கோடி வாலிபர்களைக் கர்த்தருக்குள் வழிநடத்த வேண்டும்" என்ற தரிசன திட்டத்தை நிறைவேற்ற, ஒவ்வொரு மாநிலத்திலும் ஜெபிக்கிற, சுவிசேஷம் அறிவிக்கின்ற வாலிபர்களை எழுப்ப வேண்டும் என்ற தரிசனத்தோடு வாலிபர் ஊழியம் செயல்பட்டு வருகிறது. கடந்த 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலும் ஆந்திரா, கர்நாடகா, தெலுங்கானா, டெல்லி, மகாராஷ்டிரா மாநிலங்களின் ஒரு சில பகுதிகளில் வாலிபர் எழுப்புதல் கூடுகைகள் நடத்த தேவன் கிருபை செய்தார். இக்கூடுகைகளில் சுமார் **8,930** வாலிபர்கள் கலந்து கொண்டார்கள். வந்திருந்த ஒவ்வொரு வாலிபர்களும் ஜெபிக்கவும் சுவிசேஷம் அறிவிக்கவும் தங்களை அர்ப்பணித்ததோடு, சுவிசேஷம் அறிவிக்க **3 இலட்சத்திற்கும்** அதிகமான கைப்பிரதிகளையும் வாங்கிச் சென்றனர்.

தேவனுக்கே மகிமை!







# தேடி வந்து ஆசீர்வதிப்பேன்!!



செய்தி: மோகன் சி. லாசரஸ்

***இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில், உங்கள் எல்லோருக்கும் என் அன்பின் புது வருட நல் வாழ்த்துக்கள்!***

ஒரு தகப்பன் தன் பிள்ளையைத் தோளில் சுமந்து செல்வதைப் போல, கடந்த வருடம் முழுவதும் நம்மைச் சுமந்து வந்து, ஒரு புது வருடத்தைக் காணச் செய்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக!

ஒவ்வொரு வருடமும், நமது 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியத்திற்கென்று காத்திருந்து ஜெபிக்கும்போது, ஆண்டவர் வாக்குத்தத்தங்களைக் கொடுத்து, அந்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றியும் வருகிறார். அதுபோலவே இந்த 2025ம் வருடத்திற்காகக் காத்திருந்து ஜெபித்தபோது, **''நான் என் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தும் எந்த ஸ்தானத்திலும் உன்னிடத்தில் வந்து, உன்னை ஆசீர்வதிப்பேன்''** (யாத். 20:24) என்று கர்த்தர் வாக்குப் பண்ணினார்.

எனக்குப் பிரியமான வாலிப மகனே(ளே) நீங்கள் தொழில் செய்து கொண்டிருந்தால், கர்த்தர் வந்து உங்கள் தொழிலை ஆசீர்வதிப்பார்! அல்லது நீங்கள் வேலை செய்து கொண்டிருந்தால், கர்த்தர் வந்து அந்த வேலையில் உங்களை ஆசீர்வதித்து உயர்த்துவார்! அல்லது நீங்கள் படித்துக் கொண்டிருப்பீர்களானால், நீங்கள் படித்துக் கொண்டிருக்கிற இடத்தில் கர்த்தர் வந்து, படிப்பில் உங்களை ஆசீர்வதிப்பார்! அல்லது ஊழியம் செய்து கொண்டிருப்பீர்களானால், கர்த்தர் அந்த ஊழிய ஸ்தலத்தில் வந்து உங்களை ஆசீர்வதித்து, மேன்மைப்படுத்துவார்!



அன்றைக்கு நாயீனூர் விதவைக்கு அற்புதம் செய்து, மரித்துப் போன அவளுடைய ஒரே மகனை உயிரோடு எழுப்பிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து அங்கிருந்த ஜனங்கள், ''தேவன் தமது ஜனங்களைச் சந்தித்தார்'' (லூக்கா 7:16) என்று மிகவும் ஆச்சரியப்பட்டுச் சொன்னார்கள். அவரைத் தேடி வந்த அனைவரும் அவரிடத்தில் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டார்கள். அதே சமயத்தில், அவரே மக்களைத் தேடிச் சென்று அற்புதங்களைச் செய்து, அவர்களை மகிழப் பண்ணிய அனேக சம்பவங்களும் பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டு இருக்கிறது. அதே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, இன்றைக்கும் தன்னைத் தேடுகிற மக்களைச் சந்தித்து, அவர்களுக்கு அற்புதங்களைச் செய்து கொண்டிருக்கிறார். இன்றைக்கு கர்த்தர் உங்களைப் பார்த்து, என் மக(னே)ளே, நானே உன்னிடத்தில் வந்து, உன்னை ஆசீர்வதிப்பேன்!'' என்று சொல்கிறார்.

இப்பொழுதும், கர்த்தர் நம்மைச் சந்தித்து, என்னென்ன ஆசீர்வாதங்களை நமக்குத் தருகிறார் என்று சற்று தியானிப்போம்.

## இரட்சிப்பு என்கிற ஆசீர்வாதம்!




'எரிகோ' என்கிற ஒரு பட்டணத்தில் ஆயக்காரருக்கு தலைவனும், பெரிய செல்வந்தனுமாக இருந்த, 'சகேயு' என்கிற ஒரு மனிதனை இயேசு கிறிஸ்து சந்தித்தார். அவர் ஒரு வருமான வரி அதிகாரியாக இருந்தவர். அரசு வேலை! கை நிறைய சம்பாத்தியம்! அந்தப் பட்டணத்தில் அவர் பிரபலமான ஒரு மனிதராகவும் இருந்தார்! ஆனால், அவருடைய உள்ளத்தில் சமாதானமில்லை! அந்த நிலமையில், அவர் இயேசு கிறிஸ்துவைப் பார்க்க வேண்டுமென்று விரும்பினார். இயேசு கிறிஸ்துவும் அவரை வந்து சந்தித்தார்.

அப்படி இயேசு அவரைச் சந்தித்தபோது, **''சகேயுவே, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்க வேண்டும் என்றார்''** லூக்கா 19:5. அந்த வார்த்தையைக் கேட்ட சகேயுவால் நம்பவே முடியவில்லை. ''இந்தப் பட்டணத்தில் யாருமே என்னை நேசிப்பதில்லை! ஒரு மனிதனாகக் கூட என்னை யாரும் மதிப்பதில்லை! 'பாவியான மனிதன்!' என்று சொல்லி, எல்லோரும் என்னை ஒதுக்கி வைத்திருக்கிறார்கள்! ஆனால், மனிதனாக வந்திருக்கிற கடவுள் என்னோடு கூட வந்து, என் வீட்டில் தங்கப் போகிறாரா?'' என்று, சகேயுவுக்கு ஒரே ஆச்சரியம்! தான் சொன்னபடியே சகேயுவின் வீட்டிற்குப் போன இயேசு கிறிஸ்து அவரைப் பார்த்து, **''இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது''** (லூக்கா 19:9) என்று சொல்லி, அவரை ஆசீர்வதித்தார். பாவ மன்னிப்பாகிய இந்த இரட்சிப்பு என்பது கர்த்தர் நமக்குக் கொடுக்கிற ஒரு மிகப் பெரிய, மெய்யான, மேன்மையான ஆசீர்வாதம்! அந்த ஆசீர்வாதத்தை சகேயுவுக்கு மட்டுமல்ல, அவருடைய முழுக் குடும்பத்திற்கும் கர்த்தர் அருளிச் செய்தார்.

''நான் வந்து உன்னை ஆசீர்வதிப்பேன்!'' என்று சொல்லியிருக்கிற கர்த்தர், சகேயுவை போய்ச் சந்தித்து, 'இரட்சிப்பு' என்கிற விலையேறப் பெற்ற ஆசீர்வாதத்தை அவருக்குக் கொடுத்தார். அந்த ஆசீர்வாதம் அவருக்கு எப்படி வந்தது?'' என்று யோசித்துப் பார்த்தால், அதுவரை தனக்கும் தன்னுடைய குடும்பத்திற்கும் அநியாயமாய் சொத்துக்களை சேர்த்துக் கொண்டிருந்த சகேயு, முதன்முறையாக இயேசு கிறிஸ்துவினிடத்தில், ''ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்கு நான் கொடுக்கிறேன். யாரிடமாவது அநியாயமாக நான் வாங்கினதுண்டானால், அதை நாலத்தனையாகத் திரும்பக் கொடுக்கிறேன்'' என்று சொன்னார். சகேயு தன்னுடைய தவறை உணர்ந்து, மனந்திரும்பி, தன் பாவத்தை எல்லோருக்கும் மத்தியில் அறிக்கை செய்து, தன் காரியங்களைச் சரி செய்தவுடனே, கர்த்தர் அந்த ஆசீர்வாதத்தை அவருக்குக் கொடுத்தார்.

எனக்கு அன்பான மக(னே)ளே, 'இரட்சிப்பு!' என்கிற ஆசீர்வாதம் எளிதாக வந்து விடாது. அந்த ஆசீர்வாதம் நமக்கு வர வேண்டுமானால், நம்முடைய பாவத்தைக் குறித்த உணர்வும், ஒரு மனந்திரும்புதலும் நமக்கு இருக்க வேண்டும். மட்டுமல்ல, நம்முடைய வாழ்க்கையில் சரிப்படுத்தப்பட வேண்டிய காரியங்களைச் சரிப்படுத்தும்போது, கர்த்தர் கொடுக்கிற விலையேறப் பெற்ற அந்த இரட்சிப்பின் சந்தோஷமும், சமாதானமும், சகலவிதமான ஆசீர்வாதங்களும் நமக்கு உண்டாகும்!

## சுகம் என்கிற ஆசீர்வாதம்!



**''இயேசு பேதுருவின் வீட்டிலே வந்து, அவன் மாமி ஜூரமாய்க் கிடக்கிறதைக் கண்டார். அவர் அவள் கையைத் தொட்டவுடனே ஜூரம் அவளைவிட்டு நீங்கிற்று; அவள் எழுந்திருந்து, அவர்களுக்குப் பணிவிடை**

**செய்தாள்''** (மத்தேயு 8:14,15) என்று, பரிசுத்த வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

பேதுருவினுடைய வீட்டிலிருந்த அவருடைய மாமியார், ஒரு கொடிய காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு, மரணப் படுக்கையில் இருந்தார்கள். அப்பொழுது இயேசு கிறிஸ்து அந்த வீட்டிற்கு வந்து, அவர்களைத் தொட்டபோது, அந்த நொடிப் பொழுதில் அந்தக் காய்ச்சல் நீங்கியது! பாருங்கள்; மரணம் ஏற்பட்டு விடுமோ? என்று எண்ணி, மிகுந்த துக்கத்தோடும், பயத்தோடும் இருந்த பேதுருவின் வீட்டிற்குள் இயேசு கிறிஸ்து வந்து, அவருடைய மாமியாரின் மரணப் படுக்கையை மாற்றினார்! அதே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துதான் இன்றைக்கு உங்களைப் பார்த்து, ''நான் உன்னிடத்தில் வந்து, உன்னை ஆசீர்வதிப்பேன்'' (யாத். 20:24) என்று சொல்கிறார்.

ஒருவேளை இன்றைக்கு உங்கள் குடும்பத்தில் உள்ள யாரோ ஒருவர் தீராத வியாதியினால் பாதிக்கப்பட்டு, மரணப் படுக்கையில் கிடப்பதை எண்ணி கவலைப்பட்டு, கலங்கிக் கொண்டிருக்கிறீர்களா? கலங்காதிருங்கள்! இயேசு கிறிஸ்து வந்து சுகம் கொடுத்து, ஆசீர்வதிப்பார்! ஆனால் அவர் ஆசீர்வதிக்க வேண்டுமானால், நீங்கள் அவரை உங்கள் வீட்டிற்குள் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர் உள்ளே வந்து விட்டால், கட்டாயம் ஆசீர்வதிப்பார். அவர் கொடுக்கிற ஆசீர்வாதங்களில் ஒன்று, நல்ல சுகம்!

கர்த்தர் இன்றைக்கு உங்களைப் பார்த்து, என் மகனே(ளே), உன்னுடைய வீட்டிற்குள் நான் வந்து, உன்னை ஆசீர்வதிக்க விரும்புகிறேன். நீ என்னை விரும்பி ஏற்றுக் கொண்டால்தான், நான் உன் வீட்டிற்குள் வர முடியும். நான் உன் வீட்டிற்குள் வர ஆயத்தமாக இருக்கிறேன்'' என்று சொல்கிறார்.

## இழந்ததை திரும்பக் கொடுக்கும் ஆசீர்வாதம்!



இஸ்ரேல் தேசத்தில் எருசலேமிலிருந்து சுமார் 2 மைல் தூரத்தில் உள்ள, 'பெத்தானியா' என்கிற ஒரு கிராமத்தில், 'மார்த்தாள்', 'மரியாள்' என்ற 2 சகோதரிகள் இருந்தார்கள். அவர்களுக்கு, 'லாசரு' என்கிற ஒரேயொரு சகோதரன் இருந்தார். வியாதிப்பட்டிருந்த லாசரு திடீரென்று ஒருநாள் மரித்துப் போனார். அவரை அடக்கம் பண்ணி விட்டார்கள். தங்களுடைய ஒரேயொரு சகோதரனை இழந்து போயிருந்த நிலைமையில், அந்தச் சகோதரிகள் இருவரும் மிகுந்த துக்கத்தோடு அழுது கொண்டிருந்தார்கள். லாசரு அடக்கம் பண்ணப்பட்டு 4 நாட்கள் கழித்துத்தான் இயேசு கிறிஸ்து பெத்தானியாவிற்குப் போனார். இயேசு கிறிஸ்து வருகிறார் என்று மார்த்தாள் கேள்விப்பட்டு, எதிர்கொண்டு ஓடிப் போய் அவரைச் சந்தித்து, ''ஆண்டவரே, நீங்கள் கொஞ்சம் முந்தி வந்திருந்தால் லாசரு மரித்திருக்க மாட்டானே! அவனை அடக்கம் பண்ணி 4 நாட்கள் ஆகி விட்டதே!'' என்று சொல்லி, ஆதங்கப்பட்டாள் (லூக்கா 11:21,39). அதேபோல, மரியாளும் இயேசு கிறிஸ்துவினிடத்தில் வந்து முறையிட்டு அழுதாள் (லூக்கா 11:28-32).

எனக்கு அன்பான மகனே(ளே), இன்றைக்கு நீங்களும் கூட ஏதோவொன்றை இழந்து போன நிலமையில் துக்கத்தோடு அழுது கொண்டிருக்கலாம்! அதன் நிமித்தமாக உண்டான நிந்தைகள், அவமானங்கள்,



பரிகாசங்கள் மத்தியில், 'எல்லாம் முடிந்து விட்டது, இனி அவ்வளவுதான்!' என்கிற சூழ்நிலையின் மத்தியில் நீங்கள் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கலாம்! கலங்காதிருங்கள்! உங்கள் கண்ணீரை துடைத்து உங்களை ஆசீர்வதிக்க இயேசு கிறிஸ்து உங்களுடைய வீட்டிற்கு வருவார்! நீங்கள் இருக்கிற இடத்திற்கு அவர் வந்து உங்களுக்கு அற்புதம் செய்து, உங்கள் குடும்பத்தை ஆசீர்வதிக்க வேண்டுமானால், இன்றைக்கு அவரை வரவேற்று ஏற்றுக் கொள்ளுங்கள். அவருக்கு

இடம் கொடுங்கள். அப்போது அவர் வந்து உங்களுக்கு அற்புதம் செய்வார்.



அன்றைக்கு மார்த்தாளும், மரியாளும் இயேசு கிறிஸ்துவை தங்களுடைய வீட்டிற்கு அழைத்தார்கள். அப்போது அவர் அந்த அழைப்பை அன்போடு ஏற்றுக் கொண்டு, அவர்களுடைய வீட்டிற்குப் போய், அவர்களை ஆசீர்வதித்தார் (லூக்கா 10:38). அதேபோல நீங்களும் இயேசு கிறிஸ்துவினிடத்தில், ''ஆண்டவரே, நான் உம்முடைய பிள்ளையாக இருக்க விரும்புகிறேன். நீங்கள் என் வீட்டிற்கு வந்து எங்களோடு கூட இருந்து, எங்களை ஆசீர்வதியுங்கள்'' என்று சொல்லி அவரைக் கூப்பிடுங்கள். அப்போது கர்த்தர் வருவார்.

எனக்கு அன்பான மக(னே)ளே, அவராலே எந்த ஆசீர்வாதத்தையும் நமக்குத் தர முடியும். சகல விதமான ஆசீர்வாதங்களும் அவரிடத்தில் இருக்கிறது. அவர் உங்களிடத்தில் வந்து உங்களை ஆசீர்வதிக்க ஆயத்தமாகவே இருக்கிறார். ஆனால், அவர் உங்களிடத்தில் ஒரு காரியத்தை எதிர்பார்க்கிறார். அது என்னவென்றால், **''என் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தும் எந்த ஸ்தானத்திலும் உன்னிடத்தில் வந்து, உன்னை ஆசீர்வதிப்பேன்''** (யாத். 21:24) என்று சொல்கிறார்.

**இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்த வேண்டும் என்று கர்த்தர் உங்களிடத்தில் எதிர்பார்க்கிறார். அதற்கு உங்களை ஒப்புக் கொடுப்பீர்களா? நீங்கள் உங்களை ஒப்புக்கொடுக்கும்போது, அவர் வந்து உங்களை ஆசீர்வதிப்பார். உங்களுடைய எல்லா விதமான பாவங்களையும், சாபங்களையும், வியாதிகளையும், கவலைகளையும், அவமானங்களையும், நிந்தைகளையும் சுமந்து உங்களை ஆசீர்வதிப்பதற்காகத்தான் அவர் சிலுவையில் தன்னையே பலியாக ஒப்புக் கொடுத்தார். ஆகையால், கர்த்தருடைய நாமத்தை மட்டும் விசுவாசித்து, அவருடைய நாமத்தைச் சொல்லி, அவரைத் துதித்து மகிமைப்படுத்துங்கள். அதாவது, 'இயேசு' என்கிற அவருடைய நாமத்தை உறுதியாகப் பற்றிக் கொள்ளுங்கள். அப்போது கட்டாயம் அவர் உங்கள் வாழ்க்கையில் வந்து, உங்களை ஆசீர்வதிப்பார்!**




தேர்வு எழுதும் மாணவ - மாணவியர்களுக்கான சிறப்புப் பிரார்த்தனை




**கோவில்பட்டியில்...**
நாள்: **பிப்ரவரி 9** (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: மாலை 4:00 - 7:00
இடம்: St.Pauls School, Parking Area Building, Kovilpatti.
தேவ செய்தி: **பாஸ்டர் சரவணன்**
தொடர்புக்கு : 97873 22334 | 9677858766

**புத்தூரில்...**
நாள்: **பிப்ரவரி 15** (சனிக்கிழமை)
நேரம்: மாலை 6:00 - 9:00
இடம்: Good Shepheard Compound, Puthur.
தேவ செய்தி: **சகோ. சாம் ஜெபராஜ்**
தொடர்புக்கு : 88867 39633

**சென்னையில்...**
நாள்: **பிப்ரவரி 16** (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: மாலை 3:30 - 6:30
இடம்: : உலக எழுப்புதல் ஜெப மையம், பிரின்ஸ் குஷால் டவர்ஸ், 7வது மாடி, B -Wing, மவுண்ட் ரோடு
தேவ செய்தி: **சகோ. அவினாஷ்**
தொடர்புக்கு :94884 75315 | 044-4501 6562

**சித்தூரில்...**
நாள்: **பிப்ரவரி 16** (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: மாலை 4:00 - 7:00
இடம்: St. Luke Telugu Church , Near BV Reddy Colony , சித்தூர்.
தேவ செய்தி: **சகோ. சாம் ஜெபராஜ்**
தொடர்புக்கு : 94877 34603

# வாலிபர் உலகம் பத்திரிக்கை




## தமிழ்

இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் மூலமாக 2009ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதல் **வாலிபர் உலகம்** என்ற மாதாந்திர பத்திரிக்கை தமிழ் மொழியில் வெளிவரக் கர்த்தர் உதவி செய்தார். இதில் வாலிபர்களுக்கான எழுப்புதல் செய்தி, ஆழ்மனதில் உள்ள கேள்விகளுக்குப் பதில், மேலும் கர்த்தருக்குள் வேரூன்றி வளர வேண்டிய பல செய்திகளை தொகுத்து வழங்கி வருகிறோம். சுமார் **14 ஆயிரத்திற்கும்** அதிகமான சந்தாதாரர்கள் இதில் இணைந்திருக்கிறார்கள். மாதந்தோறும் 15 ஆயிரத்திலிருந்து 17 ஆயிரம் இதழ்கள்வரை அச்சிடப்பட்டு வெளியிடத் தேவன் கிருபை செய்து வருகிறார்.

நமது websiteல் (youth.jesusredeems.com) டவுன்லோட் செய்து வாசிக்கும் பல வாலிபர்கள் இந்தப் பத்திரிக்கையின் மூலம் பரிசுத்தத்தில் பலப்பட்டு எழுப்புதல் தரிசனத்தை பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். சராசரியாக வருடந்தோறும் **10,000**த்திற்கும் அதிகமானோர் டவுன்லோட் செய்து வாசித்துப் பயனடைகிறார்கள்.

## ஆங்கிலம்

தமிழ்நாடு தவிர பிற மாநிலங்கள் மற்றும் அயல் நாடுகளில் உள்ள வாலிபர்களும் சீஷர்களாக எழும்ப வேண்டும் என்ற தரிசனத்துடன் கடந்த 2014ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் Youth Trends என்ற ஆங்கில பத்திரிக்கை துவங்கப்பட்டு சுமார் **3000** சந்தாதாரர்களுக்கு தபால் மூலம் அனுப்பப்பட்டு வருகிறது. Websiteல் சுமார் **6,000**த்திற்கும் அதிகமானோர் வருடந்தோறும் டவுன்லோட் செய்து வாசித்துப் பயனடைகிறார்கள். இந்த ஆங்கில பத்திரிக்கையின் மூலமாக உலக நாடுகளிலிருந்து வாசித்துப் பயன்பெறும் வாலிபர்கள் கர்த்தருக்காகத் தங்கள் தேசங்களில் தேவ பணியைச் செய்து வருகிறார்கள்.

## ஹிந்தி

வட மாநிலங்களில் உள்ள வாலிபர்கள் தங்கள் ஆவிக்குரிய வாழ்வில் வளர 2023ஆம் ஆண்டு முதல் ஹிந்தி மொழியில் websiteல் upload செய்யப்பட்டு வந்தது. 2024ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதல் சுமார் **1600**க்கும் அதிகமான பத்திரிக்கைகள் அச்சிடப்பட்டு தபால் மூலம் அனுப்பப்பட்டு வருகிறது. Websiteல் சுமார் **4,000**த்திற்கும் அதிகமானோர் வாசித்துப் பயனடைகிறார்கள். இதன் மூலம் வட இந்தியாவிலும் ஒரு சேனை தேவனுக்காக வைராக்கியமாக எழும்புகிறது.

## மலையாளம்

மலையாள மொழி பேசும் வாலிபர்களுக்கென்று மலையாளத்தில் 2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் websiteல் upload செய்யப்பட்டு வந்தது. 2023 ஆகஸ்ட் மாதம் முதல் **1400** பத்திரிக்கைகள் அச்சிடப்பட்டு மலையாளம் மொழி பேசும் வாலிபர்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.





























அதுமட்டுமல்லாமல் **தெலுங்கு, கன்னட** மொழிகளில் கடந்த 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் வெப்சைட் மூலமாக மாதம்தோறும் சுமார் **700**க்கும் அதிகமானோர் பதிவிறக்கம் செய்து வாசித்துப் பயன் பெற்று வருகின்றனர்.

தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

# பள்ளிக் கல்லூரிக் கூடுகைகள்





தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலும், ஆந்திரா மற்றும் கர்நாடகாவில் உள்ள பள்ளிக் கல்லூரிகளில் உள்ள மாணவர்களுக்கு இயேசுவின் அன்பை பகிர்வதோடு, கல்வியின் அவசியத்தையும் குறித்து சொல்லி நம்பிக்கையற்ற மாணவர்களுக்குப் புதிய நம்பிக்கையைக் கொடுத்து ஊக்கப்படுத்தவும், தேவன் கிருபை செய்தார். இக்கூடுகைகள் மூலம் சுமார் **48,046** மாணவர்களுக்கு இயேசுவின் அன்பை பகிர்ந்துகொள்ளத் தேவன் கிருபை கொடுத்தார்.



# Revival IGNiTERS

## மாதாந்திர வாலிபர் கூடுகைகள்

தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, பாண்டிச்சேரி மற்றும் மகாராஷ்டிராவில் ஒவ்வொரு மாதமும் வாலிபர் மாதாந்திர கூடுகைகள் நடைபெறுவதில் சுமார் 2000க்கும் அதிகமான வாலிபர்கள் ஒவ்வொரு மாதமும் கலந்துகொண்டு தங்களுடைய ஜெப வாழ்க்கையிலும், ஆவிக்குரிய வாழ்க்கையிலும் வளர்வதோடு, ஊழியம் செய்தும் அநேக ஆத்துமாக்களை இரட்சிப்புக்குள் வழிநடத்தியும் வருகிறார்கள். இவர்கள்மூலம் **4124** மணி நேரங்கள் ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டுள்ளன.









# தேர்வு எழுதும் மாணவர்களுக்கான கூடுகை








தேர்வு எழுதும் மாணவர்களுக்கான *Achievers* கூடுகை தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் நடத்த தேவன் கிருபை செய்தார். இதில் சுமார் **6241** மாணவர்கள் கலந்து கொண்டார்கள். கலந்து கொண்ட மாணவர்களில் 65%த்தினர் இயேசுவை அறியாதவர்கள். பயத்தோடு நம்பிக்கைற்ற சூழ்நிலையில் வந்த மாணவர்கள் புது நம்பிக்கையைப் பெற்று, பயம் நீங்கி நம்பிக்கையுடன் கடந்து சென்றார்கள்.










ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் **Revival Igniters Live** இயேசு விடுவிக்கிறார் சமூக வலைத்தளங்கள் மூலமாக ஒளிபரப்பப்பட்டு வருகிறது. இதில் மாதந்தோறும் சுமார் **1,500**க்கும் அதிகமான வாலிபர்கள் நேரலையில் இணைந்து பயன்பெற்று வருகிறார்கள்.

ஒவ்வொரு ஐந்தாவது ஞாயிற்றுக்கிழமைகளில் சமூக வலைத்தளங்கள் மூலமாக **ஹிந்தி மொழி** பேசும் வாலிபர்களுக்கென்றும் இந்நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டு வருகிறது. இதில் **500**க்கும் அதிகமான வாலிபர்கள் நேரலையில் இணைந்து அவர்கள் மாநிலத்தின் இரட்சிப்பிற்காகவும் எழுப்புதலுக்காகவும் ஜெபித்து வருவதோடு, அநேகர் ஜெபிக்கிறவர்களாகவும் எழும்பி இருக்கிறார்கள்.

இந்த வருடம் முதல் ஒவ்வொரு மாதமும் ஐந்தாவது ஞாயிற்றுக்கிழமை **கன்னட மொழி** பேசும் மக்களுக்கென்று கன்னட மொழியில் இந்நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டு வருவதில் சுமார் **500** பேர் இணைந்து கர்நாடக மாநிலத்தின் எழுப்புதலுக்காக ஜெபித்து வருகிறார்கள்.




**ON SUNDAY 26th JANUARY**

**Time: 3:00 PM - 5:00 pm**

IGNITERS, MONTHLY YOUTH PROGRAM IS TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK ON THE LAST SUNDAY OF EVERY MONTH









# வாலிபர் உலகம்

## தொலைக்காட்சி நிகழ்ச்சி

கடந்த 2000மாவது ஆண்டு முதல் வாலிபர் உலகம் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது வாரந்தோறும் சனிக்கிழமை காலை 6:30 மணிக்கு சத்தியம் டிவியில் ஒளிபரப்பப்பட்டு வருகிறது. இதில் சாட்சிகள், துதி ஆராதனை, கேள்வி நேரம், கனவுப் பாதை, உண்மையைத் தெரிந்துகொள் போன்ற நிகழ்ச்சிகள் மூலம் இயேசுவின் அன்பை பகிர்ந்து வருகிறோம். ஒவ்வொரு வாரமும் ஒளிபரப்பப்பட்டு வரும் புதுப்புது நிகழ்ச்சிகளின் மூலம் அநேக வாலிபர்கள் பயனடைந்து வருகிறார்கள். சமூக வலைதளங்கள் மூலம் சுமார் **10 லட்சத்துக்கும்** அதிகமானோர் ஆசீர்வதிக்கப்பட்டு வருகின்றனர்.

தேவனுக்கே மகிமை!















**வாலிபர் உலகம்**

**சத்தியம் TVயில்**
சனிக்கிழமை தோறும்
6:30 மணி

Sathiyam

காலை 7 மணிக்கு
YouTube மற்றும் Comforter TVயிலும் பார்க்கலாம்.

வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் இந்த நிகழ்ச்சியை அறிமுகப்படுத்துங்கள். அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!!

9750955547



# பிற மாநில ஊழியங்கள்

## வட இந்திய ஊழியங்கள்

தேவனின் வழிநடத்துதலின்படி வட இந்தியாவிலிருந்து 998 வாலிபர்கள் (பஞ்சாப், ஹரியானா, சண்டிகர், ஜம்மு, மத்திய பிரதேசம், இமாச்சல பிரதேசம், டெல்லி) மற்றும் கிழக்கிந்தியாவிலிருந்து (சட்டீஸ்கர், மேற்கு வங்காளம், பீகார், ஜார்கண்ட், உத்திரபிரதேசம், ஒரிசா, உத்திரகாண்ட், மத்தியபிரதேசம்) 968 வாலிபர்களும் கடந்து வந்து எழுப்புதல் அக்கினியை தங்கள் மாவட்டத்துக்கு முதன்முதலில் கொண்டு போனார்கள். இந்த வாலிபர்கள் தங்களை அர்ப்பணித்து தேவனுடைய எழுப்புதல் பணியை வாஞ்சையோடு செய்ய ஆரம்பித்து விட்டார்கள். இவர்களுக்கு பின்தொடர் ஊழியம் செய்ததின் விளைவாக டெல்லி மற்றும் மும்பை வாலிபர் கூடுகைளில் திரளான வாலிபர்கள் வந்து தேவனை ஆராதிக்கவும், தேவனுக்காக எழுந்து செயல்படவும் ஆரம்பித்து விட்டார்கள். இந்த வருடம் மட்டும் **95,157** வாலிபர்களுக்கு சுவிசேஷம் அறிவித்துள்ளனர். **3,68,142** மணி நேரங்கள் தங்கள் மாநிலத்தின் வாலிபர்களுக்காக ஜெபித்துள்ளனர்.









## ஆந்திரா தெலுங்கானா ஊழியங்கள்

எழுப்புதலில் முக்கிய பங்கு வகிக்கும் ஆந்திரா மற்றும் தெலுங்கானா ஆகிய இரு மாநிலங்களிருந்து சுமார் **500**க்கும் அதிகமான வாலிபர்கள் நாலுமாவடியில் எழுப்புதலை பரவசெய்வோர் முகாமில் கலந்துகொண்டு பெலனடைந்தனர். இதன் விளைவாக 2024ம் ஆண்டில் சித்தூர், புத்தூர், குப்பம், திருப்பதி, ஹைதராபாத், திருப்பதி ஆகிய இடங்களில் சுமார் **1,21,274** பேருக்கு இயேசுவின் அன்பை சுவிசேஷமாக அறிவிக்கவும், **15,499** மணி நேரங்கள் எழுப்புதலுக்காக ஜெபிக்கவும் தேவன் கிருபை செய்தார். அதுமட்டுமல்லாமல் சித்தூர், திருப்பதி மற்றும் ஹைதராபாத் ஆகிய பட்டணங்களில் வாலிபர்களுக்கான மாதாந்திர பின்தொடர கூடுகைகளும், ஹைதராபாத், நாகர்கர்னூல், குப்பம், சித்தூர் ஆகிய இடங்களில் வாலிபர்களுக்கான சிறப்பு எழுப்புதல் கூடுகைகள் நடத்தப்பட்டதில் சுமார் **1000** வாலிபர்கள் பங்குபெற்று ஆசீர்வதிக்கப்பட்டனர்.

## கேரளா ஊழியங்கள்

கேரளா மாநிலத்திலிருந்து **600**க்கும் மேற்பட்ட வாலிபர்கள் எழுப்புதல் அக்கினியை பரவ செய்வோர் முகாமில் பங்குபெற்றனர். அவர்கள் மூலமாக இந்த எழுப்புதல் அக்கினி வேகமாக பரவி வருகிறது. 2024ஆம் ஆண்டில் **1,75,103** பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதுமன்றி **14,534** மணி நேரங்கள் தேசத்தின் எழுப்புதலுக்காக ஜெபித்து உள்ளனர். ஆண்டவர் சொன்ன வார்த்தையின்படியே தென் மாநிலங்களில் எழுப்புதல் பரவ தொடங்கிவிட்டது.

தேவனுக்கே மகிமை!





# MOUNT SINAI 2024

## (வாலிபர்களுக்கான ஒருநாள் உபவாச கூடுகை)



வாலிபர்களை ஜெபிக்கும் ஜெப வீரர்களாக எழுப்ப வேண்டும் என்ற தரிசனத்தோடு கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் மவுண்ட் சீனாய் என்ற ஒரு நாள் வாலிபர் உபவாசக் கூடுகை நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி தினத்தன்று ஆயிரக்கணக்கான வாலிபர்கள் கலந்து கொண்டு தேசத்திற்காகவும், தேசத்தில் பெருகி வரும் பாவங்களுக்காகவும், தேசம் எழுப்புதல் அடைய வேண்டும் என்றும் ஒருநாள் முழுவதும் உபவாசித்து ஜெபித்து வருகிறார்கள். இந்த வருடமும் தீபாவளி தினத்தன்று தமிழ்நாடு, ஆந்திரா, பாண்டிச்சேரி மற்றும் மகாராஷ்டிரா என 30 இடங்களில் இக்கூடுகையை நடத்த தேவன் கிருபை செய்தார். இதில் சுமார் 9903 வாலிபர்கள் கலந்து கொண்டு தேசத்திற்காக மன்றாடி ஜெபித்தார்கள். வாலிபர்கள் தேவனுக்காகப் பரிசுத்தமாக வாழ்வது எப்படி மற்றும் எப்படி கர்த்தருக்காக எழும்பி ஊழியம் செய்ய வேண்டும் என்ற இரண்டு தலைப்புகளில் செய்திகள் அளிக்கப்பட்டன. கேட்ட சத்தியத்தின்படி வாலிபர்கள் அனைவரும் இயேசுவுக்காக எழும்பத் தங்களை அர்ப்பணித்ததோடு, சுவிசேஷம் அறிவிப்போம் என்று சுமார் 2.5 இலட்சம் கைப்பிரதிகளையும் வாங்கிச் சென்று தீவிரமாய் அறிவிக்க ஆரம்பித்துவிட்டனர். தேவனுக்கே மகிமை!



























# Revival IGNITERS Monthly Fellowship

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!

## EVERY 1ST SUNDAY (5TH JAN.)

### MUMBAI – DHARAVI (5PM – 7:30PM)
World Revival Prayer Centre, 2nd Floor, Above Balakrishna Farsan Mart, Opp. Apna Restaurant, Near Kamarajar School, 90 Feet Road,9004882470

### VELLORE (3PM)
World Revival Prayer Centre, Ajantha Mahal,
# 3, 6th West Cross Road, Gandhi Nagar
9442885315 | 9442979556

### TIRUPUR (4PM – 6:30PM)
World Revival Prayer Centre, #62, 2nd Floor,
Benny Kumaran Main Road.
9442885315

### TUTICORIN (3PM – 5:30PM)
World Revival Prayer Centre, Jehovah Jireh Towers,
51/8D/3, 1st Floor, Tiruchendur Road, Muniasamypuram
LAND MARK: SOUTH POLICE STATION TO KAMARAJ COLLEGE RD.
9442885315 | 9786212103

### TIRUPATI (3PM)
World Revival Prayer Centre, Unlimited Show Room (Opp.)
7989295442 | 9488938305

### AMBUR (3PM-6PM)
Concordia Hr.Sec. School, Opp Rly.Station
9597927799 | 9442885315

### THANE (5PM - 7:30PM)
R.P. Mangala High School (Near Railway Station),
Room No.10, Opp. Bank of Maharashtra, Thane (East)
9004882470

### THANJAVUR (3PM)
World Revival Prayer Centre,Near Balaji Nagar Bus Stop,
18B, TPS Nagar, MC Road
9489775075 | 9444381971

### KOVILPATTI (2:30PM -5:30PM)
St. Paul's Matriculation School (Parking area Building)
9677858766 | 9787322334

### ALANGULAM (2:30PM)
D. No. 5/2, Vaanjinathan Street,North side of TPV Mill,
Thuththikulam Road,
9750955548 | 9965377427

### THENI (2:30PM – 5PM)
World Revival Prayer Centre,#203, Madurai Road,
Opp. Anantham Silk, Dr. Kamaraj Hospital, 1st Floor
9750955548 | 9976766422

### SURANDAI (2:00PM)
Jawaharlal Middle School
9443962141 | 9750955548

### SATHANKULAM (3PM -5:30PM)
Hendry Matric Higher Secondary School, Mela Sathankulam.
9442885315 | 9786212103

### CHENGALPET (3PM – 5:30PM
Reheboth Church, Near old bus stand,
9710809626 |9488475315

### NAMAKKAL (3PM -5:30PM)
World Revival Prayer Centre,16B Naveen Nest Apartment,
Podhigai Nagar, 1st street, Salem Road, Namakkal-637001
9962085523 | 94886 18305

## EVERY 2ND SATURDAY (11TH JAN.)

### BANGALORE (3PM-5PM)
Telugu Church, #21, Nethaji Road, Railway Line,
Pulikeshi Nagar, Frazer Town.Opp: BWSSB Office.
9962085523 | 9591077110

### MADURAI (3PM -5:30PM)
Devanukae Mahimai Church,Nearby MGM Plaza,
[Theekadir Busstop] 41, K.Salai pudur Byepass Road, Madurai
9750955548

## EVERY 2ND SUNDAY (12TH JAN.)

### SANKARANKOIL (2:30PM – 5PM)
World Revival Prayer Centre, Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

### POLLACHI (3PM TO 6PM)
World Revival Prayer Centre, Grace Auto 1st floor,
163, Raja mill road, Pollachi,
9486037586 | 9487856205

### VILLUPURAM (3PM – 5:30PM)
World Revival Prayer Centre, HH Complex,
Namnadu Textiles, Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

### ERODE (4PM – 6:30PM)
World Revival Prayer Centre, #216, 1st Floor,
Near Fire Service, Gandhiji Road
9750722000

## EVERY 3RD SUNDAY (19TH JAN.)

### TIRUNELVELI (2:30 PM)
World Revival Prayer Centre, Shah Complex,
#43/R4, Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9047480484

### SIVAKASI (3PM -5PM)
World Revival Prayer Centre, HOREB Complex,
1st Floor, P K N Road, (Near Rathna vilas Bus Stop)
9677858766 | 9442906567

### COIMBATORE (4 PM)
World Revival Prayer Centre, #90, 1st Floor,
Arts College Road, Near Charan Tower,
9894399599 | 9442885315

### TRICHY (3 PM)
World Revival Prayer Centre, 22A, 1st Floor ,
Thennur High Road, Near KMC Bus Stop, Thennur.
9489775075 | 8344119000

### JEBAMALAI (2 PM)
Keelamathapuram, Kadaiyam (via), Tenkasi Dist.
8300131000 | 9750955548

### CHENNAI (3 PM)
World Revival Prayer Centre, Prince Kushal Towers, 7th
Floor B-Wing, Adjacent to LIC Metro, Mount Road,
9488475315

### NALUMAVADI (3PM -5:30PM)
Tabernacle of God, Nalumavadi
9442885315

### TIRUVARUR (3:30PM)
World Revival Prayer Centre, I.S.A. Rice Mill Complex,
TTP Main Rd,
9976766322 | 7373374733

### RANIPET (3PM-6PM)
World Revival Prayer Centre, Railway Station Road,
Zion Nagar, Near Scudder Memorial Hospital
9500283179 | 9442885315

### NAGERCOIL (3PM TO 6PM)
World Revival Prayer Centre, NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9442885315

### PONDICHERRY (3PM TO 6PM)
World Revival Prayer Centre, Kottupalayam Lawspet,
opp. Latha Steel, E C R Road.
8344433800 | 9442885315

### CHITTOOR (3PM TO 6PM)
World Revival Prayer Centre, Kamlambal Street, Readspet,
Kangareddy palli,
9487734603

## EVERY 4TH SATURDAY (25TH JAN.)

### PERAMBALUR (5PM -8PM)
World Revival Prayer Centre, M K Complex,
71, Venkatesapuram, Near Bank of Baroda,
Trichy Main Road. 9788788512

## EVERY 4TH SUNDAY (26TH JAN.)

### THIRUVALLUR (3PM -5:30PM)
World Revival Prayer Centre, H S R Tower,
2nd Floor, Near CSI Gowdi Church
9488475315

### KARUR (3PM-5:30PM)
CSI Boys High schools, Jawahar Bazzar,
Bunglaw Street, Karur.
9489775075

### MUMBAI-MALAD (4PM – 6PM)
Bethel Ground Floor, 305/E, Mith Chauky,
Marve Road, Malad (W)
9664050567 | 9619996976

### PERNAMPET (3PM TO 6PM)
Revival Prayer centre, VK Road.
9442885315



### DHARAPURAM (3:30PM – 6PM)
2nd Floor, MK Arcade,  Near Bus Stand,
8248283373 | 9442885315

**கலந்து கொள்ளுங்கள்**
**எழுப்புதலைப் பற்ற வைப்போர்களாய் மாறுங்கள்!**

# எழுப்புதலை பரவச் செய்வோர் முகாம்





இயேசு விடுவிக்கிறார் ஊழியத்திற்கு ஆண்டவர் கொடுத்த தரிசனத்தின்படி வாலிபர்களுக்கென்று எழுப்புதலை பரவச் செய்வோர் முகாம் 2021ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. இதில் தமிழ்நாடு, ஆந்திரா - தெலுங்கானா, கர்நாடகா, வடகிழக்கு மாநிலங்கள், கிழக்கிந்திய மாநிலங்கள், கேரளா என இந்தியாவின் எல்லா எல்லைகளிலுமிருந்து சுமார் **13,000**க்கும் மேற்பட்ட வாலிபர்கள் தேவனுடைய கூடாரம் நாலுமாவடிக்கு வரவழைக்கப்பட்டனர். இதில் கலந்துகொண்ட அனைவரும் எழுப்புதல் அக்கினியை தங்கள் மாநிலங்களுக்குச் சுமந்து சென்றனர். இந்த ஆண்டு (2024) மே மாதம் 3, 4, 5 தேதிகளில் தமிழ்நாட்டில் உள்ள வாலிபர்களுக்கென்று 4வது batch நடைபெற்றதில் **சுமார் 1093** வாலிபர்கள் கலந்து கொண்டு எழுப்புதல் அக்கினியைப் பெற்று, புதிய அபிஷேகத்துடன் கடந்து சென்று தங்கள் பட்டணங்களிலும், கிராமங்களிலும் தீவிரமாய் சுவிசேஷம் அறிவிக்க ஆரம்பித்து விட்டனர்.














# புத்துணர்ச்சி முகாம்











தமிழ்நாட்டில் உள்ள வாலிபர்களுக்கென்று 4 பிரிவுகளாக நடத்தப்பட்ட எழுப்புதலைப் பற்றவைப்போர் முகாமில் கலந்து கொண்ட Ignitersக்கு கடந்த 2024ஆம் ஆண்டு மே மாதம் 30, 31 தேதிகளில் 2 நாட்கள் புத்துணர்ச்சி முகாம் (Refreshment camp) 2 நாட்கள் நடைபெற்றது. இதில் **1087** Igniters கலந்து கொண்டு, தாங்கள் பெற்றுக்கொண்ட அபிஷேகத்தை புதுப்பித்துக் கொண்டு சென்றனர். தேவனால் அழைக்கப்பட்டவர்கள் எழுப்புதலில் பயன்படப் புதிய அபிஷேகத்தையும் வல்லமையையும் வரங்களையும் பெற்றுச் சென்றனர். இவர்கள் மூலமாகத் தேவன் செய்த அநேக அற்புத அடையாளங்களை அவர்கள் பகிர்ந்து கொண்டபோது, கர்த்தர் வாக்கு கொடுத்தபடி ஆதி அப்போஸ்தலர்கள் நாட்கள் திரும்ப வந்துவிட்டதை எண்ணி தேவனுக்கு மகிமையை செலுத்தினோம்.





ஜனவரி 2025

# ஜெபக் கையேடு

ஜெபம்: எஸ்தர்

1 இந்தியா முழுவதும் மதுஅருந்தும் பழக்கத்திற்கு அடிமைப்பட்டு இருக்கும் 16 கோடிக்கும் அதிகமானோர் இந்தப் பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

2 இந்தியாவில் மூன்றில் ஒருவர் மதுவுக்கு அடிமையாகி உள்ளனர். இவர்கள் விடுவிக்கப்படவும், மதுஅருந்தும் பழக்கமுள்ள 7.5% பெண்கள் விடுவிக்கப்படவும் ஜெபிப்போம்.

3இந்திய அளவில் மதுவினால் ஆண்டுக்கு 30 லட்சம் பேரும், நிமிடத்திற்கு 6 பேரும் இறந்து வருகின்றனர். இந்த மரணங்கள் வராமல் தடுக்கப்பட ஜெபிப்போம்.

4மது போதைக்கு அடிமையாகும் இளைஞர்களின் எண்ணிக்கை ஐந்து மடங்காக அதிகரித்து வருவது தடுக்கப்படவும், இளைஞர்களுக்குள் விழிப்புணர்வு உண்டாகவும் ஜெபிப்போம்.

5 இந்தியாவில் 45% மது விற்பனை நடக்கும் நான்கு மாநிலங்களில் உள்ள முதலமைச்சர்களின் இருதயங்களில் கர்த்தர் பெரிய மாற்றத்தைக் கொண்டு வர ஜெபிப்போம்.

6 இந்தியாவில் தினமும் 80 கொலை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், ஒரு வருடத்தில் 29 ஆயிரத்து 193 பேர் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் தேசிய குற்ற ஆவண காப்பகம் குறிப்பிட்டுள்ளது. நம் தேசத்தின் இந்நிலை முற்றிலும் மாறும்படி ஜெபிப்போம்.

7 கொலை வழக்கில் அதிகபட்சமாகக் கடந்த ஆண்டில் 3779 கொலை வழக்குகளுடன் முதலிடத்தில் இருக்கும் உத்தரபிரதேச மாநிலத்தின் இரட்சிப்பிற்காக ஜெபிப்போம்.

8 இந்தியாவில் வன்முறை மற்றும் கொலை சம்பவங்கள் குறைக்கப்படவும், குற்ற செயல்கள் குறையவும் ஜெபிப்போம்.

9 இளவயதினர் மத்தியில் கொலை சம்பவங்கள் அதிகரித்து, எதிர்கால இளைஞர்கள் ஒருவரை ஒருவர் கொலை செய்து தங்கள் வாழ்க்கையை அழித்துக் கொள்ளும் இந்த அவல நிலை மாற ஜெபிப்போம்.

10 கொலைவெறியைத் தூண்டி மனிதர்களின் இரத்தங்களை பூமியில் சிந்தப் பண்ணுகிற பொல்லாத கொலைவெறியின் ஆவிகள் கட்டப்பட ஜெபிப்போம்.

11 மணிப்பூர் மாநிலத்தில் வன்முறையைத் தூண்டுகிற ஆவிகள் கட்டப்படவும், வன்முறைகள் அடியோடு ஒழிக்கப்படவும் ஜெபிப்போம்.

12 வன்முறை சம்பவங்களினால் எந்த மரணங்களோ இழப்புகளோ வராமல் ஜனங்கள் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.

13 மணிப்பூர் மாநிலத்தின் முதலமைச்சர் மற்றும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இந்த வன்முறைகளுக்குத் தீர்வு கிடைக்க நல்ல தீர்மானம் எடுக்க ஜெபிப்போம்.

14 குக்கி மற்றும் மெய்தி இன மக்களிடையே காணப்படும் மோதல்கள் மற்றும் வன்முறைகள் நீங்கிச் சமாதானம் உண்டாக ஜெபிப்போம்.

15 மணிப்பூர் மாநிலம் எழுப்புதலுக்கு ஆயத்தமாக்கப்படவும், அங்கிருக்கும் ஜனங்கள் இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொள்ளவும் ஜெபிப்போம்.

16 மணிப்பூர் மாநிலம் போன்ற சூழ்நிலை வேறு எந்த மாநிலங்களிலும் ஏற்படாதபடி தேவ பாதுகாப்புக்குள் ஒப்புக்கொடுத்து ஜெபிப்போம்.

17 குளிர்காலங்களில் சரியான உடை, தங்க இடம் இல்லாமல் தவிக்கும் பிள்ளைகளுக்கு உதவிகளைச் செய்கிற நல்ல நபர்களைத் தேவன் எழுப்பிட ஜெபிப்போம்.

18 பணவீக்கம், வேலை வாய்ப்பு ஆகியவற்றில் மிகவும் மோசமான நெருக்கடியை எதிர்கொண்டு வரும் கனடா தேசத்தின் பொருளாதாரம் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

19 பிள்ளைகளுக்குப் போதுமான உணவு கொடுக்க இயலாமல் 25% பெற்றோர் தங்கள் உணவைக் குறைத்துள்ளனர். உணவுப் பொருட்களின் பற்றாக்குறை நீங்கி அந்தத் தேசத்தில் செழிப்பு உண்டாக ஜெபிப்போம்.

20 கனடாவில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் 25% மக்களின் அத்தியாவசிய தேவைகள் பூர்த்தி செய்யப்பட, தேவ கரம் நீட்டப்படும்படி ஜெபிப்போம்.

21 இயேசுவின் மீதான விசுவாசத்தின் காரணமாக இந்தியாவில் 34 கோடிக்கும் அதிகமான கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படுவது தடுக்கப்பட ஜெபிப்போம்.

22 உலக அளவில் ஒவ்வொரு நாளும் 13 கிறிஸ்தவர்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு அவருடைய அன்பின் வழியில் நடப்பதினால் கொலை செய்யப்படுகிறார்கள். இது தடுத்து நிறுத்தப்பட ஜெபிப்போம்.

23 கிறிஸ்துவை பின்பற்றுவதனால் தினமும் கொலை செய்யப்படுகின்ற கிறிஸ்தவர்கள்மீது தேவ பாதுகாப்பு உண்டாக ஜெபிப்போம்.

24 சிறுவர்களிடையே பெருகிவரும் வன்முறை எண்ணங்கள் மாறவும், சிறுவர்கள் மனந்திரும்பவும் ஜெபிப்போம்.

25 நம் நாட்டில் சுமார் 4 இலட்சம் பேர் தர்மம் எடுத்துப் பிழைக்கிறார்கள். வறுமை காரணமாக 3 இலட்சம் சிறுவர்கள் தர்மம் எடுக்கும் அவல நிலை மாற ஜெபிப்போம்.

26 சிறு பிள்ளைகளைக் கடத்தி, அவர்கள் உடல் உறுப்புகளை எடுத்து விற்று பணம் சம்பாதிக்கும் கயவர்கள் கையிலிருந்து குழந்தைகள் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.

27 நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் 1கோடிக்கு மேற்பட்ட குழந்தைகள் கர்ப்பத்திலேயே கொல்லப்படுகிறார்கள். கருவிலிருக்கும் குழந்தைகளைத் தேவன் பாதுகாத்துக் கொள்ள ஜெபிப்போம்.

28 நம் நாட்டில், பல்வேறு காரணங்களால் பள்ளிக்கூடம் சென்று கல்வி கற்காமல் இருக்கும் சுமார் 81 இலட்சம் சிறுவர்கள் கல்வி கற்க அரசு நல்ல திட்டங்களைக் கொடுக்க ஜெபிப்போம்.

29 இந்தியாவில் ஏதோ ஒரு போதை பழக்கத்திற்கு அடிமையாகி, சிக்கித் தவிக்கும் சுமார் 85 இலட்சம் சிறுபிள்ளைகளை தேவன் அந்த அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்க ஜெபிப்போம்.

30 நம் தேசத்தில் 49 இலட்சத்திற்கும் அதிகமான குழந்தைத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். குழந்தை தொழிலாளர் தடை சட்டங்களை அரசாங்கம் கடுமையாக்க ஜெபிப்போம்.

31 இந்தியாவில் பல குற்ற செயல்களில் ஈடுபட்டு, சிறைச்சாலைகளில் இருக்கும் 1,657 சிறுபிள்ளைகள் மனந்திரும்பி தங்கள் வாழ்க்கையை இயேசுவுக்கு ஒப்புக்கொடுக்க ஜெபிப்போம்.



# செய்திகள்!

## இந்தியாவில் 16.9 லட்சம் எய்ட்ஸ் நோயாளிகள்

### மத்திய சுகாதாரத் துறை தகவல்

இந்தியாவில் 16.9 லட்சம் எய்ட்ஸ் நோயாளிகள் உள்ளனர் என்று மத்திய சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. உலகம் முழுவதும் டிசம்பர் 1-ம் தேதி எய்ட்ஸ் தினம் அனுசரிக்கப்படுகிறது. இதையொட்டி மத்திய சுகாதாரத் துறை வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: இந்தியாவில் எய்ட்ஸுக்கு எதிரான போர் கடந்த 1985-ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இதன் காரணமாகக் கடந்த சில ஆண்டுகளில் நாட்டில் எய்ட்ஸ் பாதிப்பு குறைந்துள்ளது.

இந்த ஆண்டு எய்ட்ஸ் தினத்தையொட்டி புதிய விழிப்புணர்வு பிரச்சாரம் தொடங்கப்பட்டிருக்கிறது. "உரிமையின் பாதையில் செல்லுங்கள். எனது உடல்நலம், என் உரிமை" என்ற கருப்பொருளின் அடிப்படையில் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். வரும் 2030-ம் ஆண்டுக்குள் எய்ட்ஸை ஒழிக்க உலக சுகாதார அமைப்பு இலக்கு நிர்ணயித்து உள்ளது. இந்த லட்சியத்தை எட்ட மத்திய சுகாதாரத் துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

கடந்த 2019-20ம் ஆண்டில் இந்தியாவில் 13.8 லட்சம் எய்ட்ஸ் நோயாளிகள் இருந்தனர். இந்த எண்ணிக்கை 2023-24 ஆண்டில் 16.9 லட்சமாக உயர்ந்துள்ளது. இதில் 8.7 லட்சம் பேர் ஆண்கள், 8 லட்சம் பேர் பெண்கள், 6,637 பேர் மூன்றாம் பாலினத்தவர்கள் ஆவர். கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் புதிதாக 3 லட்சம் பேர் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்கு ஆசியா பிராந்திய இயக்குநர் சைமா வாசத் கூறும்போது, "தென்கிழக்கு ஆசிய நாடுகளில் சுமார் 80,000-க்கும் மேற்பட்ட சிறார்கள் எய்ட்ஸால் பாதிக்கப்பட்டு உள்ளனர். இவர்கள் 14 வயதுக்கு உட்பட்டவர்கள் ஆவர். சிறார்களைப் பாதுகாக்க உலக சுகாதார அமைப்பு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது" என்று தெரிவித்தார்.

**- 02 டிசம்பர் 2024, இந்து தமிழ் திசை.**

## உள்நாட்டு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இந்தியாவில் ரயில் உற்பத்தி செய்ய ரஷ்யா ஆர்வம்!



ரஷ்யாவில் ரயில் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இந்தியாவில் அதிக முதலீடுகளைச் செய்ய அந்த நாடு ஆர்வம் காட்டி வருகிறது. அத்துடன் இந்தியாவிலேயே ரஷ்யாவுக்கு தேவையான ரயில் பெட்டிகளைத் தயாரிப்பதற்கான உற்பத்தி மையத்தைத் தொடங்கவும் ரஷ்யா திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பாகக் கடந்த வாரம் ரஷ்யாவின் மிகப்பெரிய ரயில் நிறுவனமான டிஎம்எச், இந்திய ரயில்வே அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி உள்ளது. ரஷ்யாவின் டிஎம்எச் நிறுவனம் ஏற்கெனவே இந்தியாவில் படுக்கை வசதியுடன் கொண்ட 'வந்தே பாரத்' ரயில் உற்பத்தியில் பங்கேற்றுள்ளது. இதுகுறித்து ரயில்வே துறை உயர் அதிகாரி ஒருவர் நேற்று கூறுகையில், "ரஷ்யாவில் ரயில்களுக்கான தேவை மிக அதிகமாக உள்ளது. அதனால், இந்தியாவில் முதலீடு செய்யவும், உதிரி பாகங்களைக் கொள்முதல் செய்யவும், ரயில் உற்பத்தி மையத்தை அமைக்கவும் அந்த நாடு மிகவும் ஆர்வமாக உள்ளது" என்றார்.

இதுகுறித்து ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் இந்திய செய்தியாளர்களைச் சந்தித்த டிஎம்எச் CEO கிரில் லிபா கூறியதாவது: மற்ற நாடுகளை ஒப்பிடும்போது இந்தியாவில் வட்டி விகிதம் வித்தியாசமாக உள்ளது. எனவே, இந்தியாவில் அதிக முதலீடு செய்யத் திட்டமிட்டுள்ளோம். ஏற்கெனவே ரஷ்யாவுக்கு ரயில் தொடர்பான பல்வேறு பாகங்களைச் சப்ளை செய்வதற்காகப் பல இந்திய நிறுவனங்களுடன் ஒப்பந்தம் மேற் கொண்டுள்ளோம். அந்த நிறுவனங்களுடன் எங்களுக்குச் சிறந்த உறவு உள்ளது. எனவே, அந்த நிறுவனங்களிடமிருந்து இன்னும் கூடுதலாகப் பாகங்களை இறக்குமதி செய்யத் திட்டமிட்டுள்ளோம். இவ்வாறு கிரில் லிபா கூறினார்.

**- 28 நவம்பர் 2024, இந்து தமிழ் திசை.**

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211



# Achievers 2025



தேர்வு எழுதும் மாணவ-மாணவியர்களுக்கான சிறப்புப் பிரார்த்தனை)

## கடலூரில்...

நாள்: **ஜனவரி 11** (சனிக்கிழமை)
நேரம்: காலை 10:00 - மதியம் 1:00
இடம்: உலக எழுப்புதல் ஜெப மையம், மணிக்கூண்டு எதிரில், மஞ்சக் குப்பம்.
தேவ செய்தி: **சகோ. அவினாஷ்**
தொடர்புக்கு : 99651 44000

## சங்கரன்கோவிலில்...

நாள்: **ஜனவரி 12** (ஞாயிற்றுக் கிழமை)
நேரம்: மாலை 4:00 - 7:00
இடம்: பரி.பவுல் மனவளர்ச்சி குன்றியோர் பள்ளி வளாகம், சங்கரன்கோவில்.
தேவ செய்தி: **சகோ. அவினாஷ்**
தொடர்புக்கு : 9677858766 | 7550305278

## உசிலம்பட்டியில்...

நாள்: **ஜனவரி 19** (ஞாயிற்றுக் கிழமை)
நேரம்: மாலை 3:00 - 6:00
இடம்: அற்புத ஜெப மையம், பேரையூர் ரோடு
தேவ செய்தி: **சகோ. சதீஷ்குமார்**
தொடர்புக்கு : 7418552653 | 9750955548

## சேலத்தில்...

நாள்: **ஜனவரி 12** (ஞாயிற்றுக் கிழமை)
நேரம்: மாலை 4:00 - 7:00
இடம்: ஆண்டர்சன் மெமோரியல் சர்ச், கலெக்டர் பங்களா அருகில், கோரிமேடு
தேவ செய்தி: **சகோ. சதீஷ்குமார்**
தொடர்புக்கு : 99620 85523 | 83000 19710

## இராணிப்பேட்டில்....

நாள்: **பிப்ரவரி 1** (சனிக்கிழமை)
நேரம்: காலை 10:00 - மதியம் 1:00
இடம்: உலக எழுப்புதல் ஜெப மையம், இரயில்வே ஸ்டேஷன் ரோடு, சீயோன் நகர்.
தேவ செய்தி: **சகோ. சாம் ஜெபராஜ்**
தொடர்புக்கு : 95002 83179 | 97912 95663

## ஆம்பூரில்...

நாள்: **பிப்ரவரி 2** (ஞாயிற்றுக் கிழமை)
நேரம்: மாலை 3:00 - 6:00
இடம்: கன்கார்டியா மேல்நிலைப் பள்ளி, ஆம்பூர்.
தேவ செய்தி: **சகோ. சாம் ஜெபராஜ்**
தொடர்புக்கு : 95979 27799

## ஜெபமலையில்...

நாள்: **பிப்ரவரி 2** (ஞாயிற்றுக் கிழமை)
நேரம்: மாலை 2:00 - 5:00
இடம்: கீழ மாதாபுரம், ஜெபமலை
தேவ செய்தி: **சகோ. அவினாஷ்**
தொடர்புக்கு : 8300131000 | 97509 55548

## கோவை மாவட்டம் - அன்னூரில்...

நாள்: **பிப்ரவரி 9** (ஞாயிற்றுக் கிழமை)
நேரம்: மாலை 4:00 - 7:00
இடம்: CSI சபா மண்டபம், அம்பால் பெட்ரோல் பங்க் அருகில், சத்தி ரோடு அன்னூர்.
தேவ செய்தி: **சகோ. சதீஷ்குமார்**
தொடர்புக்கு : 99944 14424 | 86082 82082

## திருச்சியில்

நாள்: **பிப்ரவரி 23** (ஞாயிற்றுக் கிழமை)
நேரம்: மாலை 3:00 - 6:00
இடம்: YMCA Hall, Opp. to GH, Trichy
தேவ செய்தி: **சகோ. அவினாஷ்**
தொடர்புக்கு : 94897 75075



சகோ. சாம் ஜெபராஜ்



சகோ. அவினாஷ்



சகோ. சதீஷ்குமார்

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847
Postal Registration No: TTN/26/2023-2025.
Date of Publication: 25 – 12 -2024
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.


நாலுமாவடியில்...

இயேசு விடுவிக்கிறார் ஊழியங்கள் நடத்தும்

JESUS REDEEMS MINISTRIES



# Achievers

2025

ஜனவரி

26

ஞாயிற்றுக்கிழமை

தேர்வு எழுதும் மாணவ-மாணவியர்களுக்கான சிறப்புப் பிரார்த்தனை)

இடம்:
தேவனுடைய கூடாரம்,
நாலுமாவடி

நேரம்:
மதியம் 1:00 மணி முதல்,
மாலை 5:00 மணி வரை

ஆலோசனையும், ஜெபமும்:

## சகோ. மோகன் சி. லாசரஸ்



பள்ளிக் கல்லூரியில் படிக்கும் மாணவ-மாணவியர் இக்கூடுகையில் தவறாமல் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

**தோல்வி பயமா? தேர்வைக் குறித்த கலக்கமா?**
**படித்தது மறந்து போகிறதா? சந்தேகமா?**
**இயேசு உங்களுக்கு உதவி செய்வார்!**

தொடர்புக்கு: 97509 55547 | 94428 85315